Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 310

திங்கட்கிழமை 02 ஒக்ரோபர் 2023

புரட்டாதி 15 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## விபத்தில் இளைஞன் சாவு!

முல்லை., ஒக். 2
கோம்பாவிலில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம் பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ »11

யாழ்., கிளி., முல்லையில்

## சர்வதேச சிறுவர் தினத்தில் நீதிகோரி நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, ஒக். 2
இறுதிப்போரின்போது பாதுகாப்புத் தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதிகோரி »11

# பண்டாரநாயக்கவால்தான் பிரபாகரன் தமிழில் படித்தார்



'உருட்டுகிறார்' சம்பிக்க

கொழும்பு, ஒக்ரோபர் 2
பண்டாரநாயக்க சிங்கள மொழியை அரசமொழியாக்கியதால்தான் நாட்டில் இனப்போர் வெடித்தது என்ற கருத்தை ஏற்கமுடியாது. அவர் அன்று தமிழ் மொழியையும் நிர்வாக மொழியாக்கியதால்தான் பிரபாகரனுக்குக்கூட கல்வி கிடைத்தது என்று குடியரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். »11

நீதிபதி விவகாரம்:

## கிளிநொச்சியில் இன்று கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஒக். 2
முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜாவுக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் »11

## 'கப்' - மோ.சைக்கிள் விபத்தில் ஒருவர் சாவு!

சாவகச்சேரி, ஒக். 2
நுணாவில் கிழக்கு ஏ - 9 வீதியில் அமிர்தாம்பிகை வித்தியாலயத்துக்கு அருகில் 'கப்' ரக வாகனமும் - மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் குடும்பத் தலைவர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். »11

## நந்திக்கடலில் வீழ்ந்த இளைஞன் உயிரிழப்பு!

முல்லைத்தீவு, ஒக். 2
நந்திக்கடலில் மூழ்கி நேற்றுக்காலை இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். »11

## பௌத்தத்தின் வளர்ச்சியில் தமிழர்களுக்கும் பங்குண்டு

வல்பொல பியனந்த தேரர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 2
பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது முழு உலகுக்கும் சொந்தமானது. பௌத்த தர்ம வளர்ச்சிக்கு தமிழ் பௌத்தர்கள், தமிழ் சங்க காலம் »11

## இளைஞன் மீது வாள்வெட்டு!

சிறுப்பிட்டியில் பட்டப்பகலில் பதைபதைக்க வைக்கும் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 2
யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியில் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றுப் பகல், முச்சக்கர வண்டியில் பயணித்த இளைஞர் »11

தெற்காசியாவில் விரைவில்

## அதிக மின் கட்டணம்; இலங்கை முதலிடம்!

கொழும்பு, ஒக். 2
உத்தேச மின்சாரக் கட்டண அதிகரிப்பு இடம்பெற்றால், தெற்காசியாவிலேயே அதிக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நாடாக இலங்கை மாறும் என எரிசக்தி நிபுணர் திலக் சியம்பலா »11

திருகோணமலை

## இலுப்பைக்குளத்தில் விகாரை: போராட நீதிமன்றத்தால் தடை

ஊடகவியலாளர் சந்திப்புக்கு பொலிஸாரால் கெடுபிடிகள்

திருகோணமலை, ஒக். 2
திருகோணமலை, இலுப்பைக்குளம் பிரதேசத்தில் எந்தவொரு சிங்கள பௌத்த குடும்பமும் குடியிருக்காத நிலையில், அங்கு விகாரை அமைப்பதற்கு எதிராக தமிழர்களால் »11

விலைச்சூத்திரத்துக்கு அமைவாக

## எரிபொருள், எரிவாயு விலையில் மாற்றம்

கொழும்பு, ஒக். 2
எரிபொருள் விலை திருத்தம் இன்று நள்ளிரவு அறிவிக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். »11

## சினோபெக் எரிபொருள் விலை அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 2
சினோபெக் லங்கா நிறுவனம் எரிபொருள் விலையை அதிகரித்துள்ளது. »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிபதி சரவணராஜா விவகாரம்:

# முழு அரசாங்கத்துக்கும் சர்வதேசத் தலைகுனிவு!

### வடக்கு அவைத்தலைவர் சீற்றம்



**யாழ்ப்பாணம், ஒக். 2**

**உயிர் அச்சுறுத்தல் காரணமாகவும், தீர்ப்பை மாற்றுமாறு விடுக்கப்பட்ட அழுத்தம் காரணமாகவும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி சரவணராஜா நாட்டைவிட்டு வெளியேறியமை இலங்கை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட சர்வதேசத் தலைகுனிவு. இந்த விடயத்தில் சர்வதேச இராஜதந்திரிகள் மானுட தர்மத்துடன் செயற்பட்டு நீதிபதிக்கு நியாயம் பெற்றுக் கொடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.**

இதுதொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை உணர்ந்த காரணத்தினாலேயே தமது மதிப்பு வாய்ந்த நீதிபதிப் பதவியை இராஜினாமா செய்து விட்டு நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். நிலைமை இவ்வாறு இருக்கையில், நாட்டின் நீதி அமைச்சரோ அவர் தாமாக முன்வந்து சட்டமா அதிபரை சந்தித்தார், இரண்டு இராஜதந்திரிகளைச் சந்தித்தார், தமது வாகனத்தை விற்றார் என்று கூறுகிறார். நீதி அமைச்சரின் இந்தக் கூற்றுகள் அபத்தமானவை.

குருந்தூர்மலை விவகாரத்தில் சரத் வீரசேகர நீதிபதியைக் கடுமையாக விமர்சித்தார். நாடாளுமன்ற சிறப்புரிமை என்ற பாதுகாப்பு அரணுக்குள் நின்றுகொண்டு நீதிபதி மீது சேற்றை வாரியிறைத்தார். நீதிமன்ற செயற்பாடுகளில் வேறு எவரும் தலையிடுவது நீதிமன்ற நடைமுறைகளுக்கு முரணானது. ஆனால், வீரசேகர நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் நின்றுகொண்டு முன்வைத்த விமர்சனங்களை - அச்சுறுத்தல்களை முன்வைத்தபோது அதற்கெதிராக எந்த எதிர்வினையுமாற்றாது மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததன் மூலம் இந்த நாட்டில் நீதி நிர்வாகம் இனவாதத்துக்குள்ளும் மதவாதத்துக்குள்ளும் சிக்கியுள்ளமை வெளிப்படையாகின்றது.

ஒரு நீதிபதியை அவருடைய பதவி சார்ந்து பார்க்காமல் தமிழன் என்று விமர்சித்ததையும் இரசித்துக் கொண்டது முழு அரசாங்கமும். வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயம் இது.

இந்த இலட்சணத்தில்தான் உள்ளகப் பொறிமுறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்றும் சர்வதேச விசாரணை தேவையற்றது என்றும் சிங்கள ஏகாதிபத்தியம் பேசிக்கொண்டிருக்கிறது.

நீதிபதி சரவணராஜாவுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட சரத் வீரசேகர போன்றோரின் செயற்பாடுகள் பற்றி பூரணமாக விசாரணை நடத்தப்பட்டு, அவருக்கு நீதி வழங்கப்படல் வேண்டும். இதற்கு இங்குள்ள அனைத்து இராஜதந்திரிகளும் மானுட தர்மத்துடன் செயற்பட வேண்டும் - என்றுள்ளது. (ம-20)

## நீதிபதிக்கு நியாயம்கோரி ஓரணியில் குரலெழுப்புக!

### சுரேஷ் அழைப்பு

கொழும்பு, ஒக். 2

நீதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக அனைவரும் அணிதிரள்வோம் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா அச்சுறுத்தப்பட்டு, அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறும் அளவுக்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார். முல்லைத்தீவுமாவட்டத்தின் குருந்தூர்மலை பிரதேசத்தை சிங்களமயப்படுத்துவதற்கு புத்தபிக்குகள் எடுத்த முயற்சியை சட்டத்தின் அடிப்படையில் நின்று அதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்தமை அவர்மீது பிக்குகள் சினம்கொள்வதற்குக் காரணமாக அமைந்தது. குறைந்தபட்சம் நீதிமன்றங்களினூடாக தமிழ் மக்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய நீதி, நியாயத்துக்குக்கூட இவ்வாறான நடவடிக்கைகள் ஊடாக வேட்டு வைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் நீதித்துறையைக் களங்கப்படுத்துவது மாத்திரமல்லாமல் தமிழ் மக்களுக்கு தமது சொந்த இடத்திலும் நீதி கிடைக்கமாட்டாது என்ற நிலையும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினது ஜனநாயகவிரோத, தமிழ் மக்கள் விரோத இத்தகைய நடவடிக்கைகளை ஒட்டுமொத்தமான தமிழ் மக்களும் வன்மையாகக் கண்டிப்பதை வெளிப்படுத்தும் முகமாக வருகின்ற 4ஆம் திகதி புதன்கிழமை மருதனார்மடம் சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் நகரம்வரை மனிதச்சங்கிலி போராட்டம் ஒன்றை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஆயிரக்கணக்கில் நாங்கள் ஒன்று திரண்டு இந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் கலந்துகொள்வதினூடாக எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்துவோம் - என்றுள்ளது. (ம-20)



## நீதிவானுக்கு அச்சுறுத்தல்; முன்னணியும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.2

முல்லைத்தீவு நீதிவான் ரி. சரவணராஜாவின் மீது ஏற்படுத்தப்பட்ட நெருக்கடிகள் அவர் நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட மிக மோசமான இனவாத செயற்பாடுகளைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது என்று அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

நீதிவான் ரி. சரவணராஜாவுக்கு எதிராக அவரை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட மோசமான இனவாதச் செயற்பாடுகள், அச்சுறுத்தல்கள், அடிபணிய வைக்கக்கூடிய முயற்சிகள் போன்ற அனைத்தையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கிறது என்று அவர் தெரிவித்தார். (எ-100)

## கேள்விக்குறியில் நீதித்துறை அரசாங்கம் கள்ளமௌனம்!

### ஹர்ஷ டி சில்வா தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 2

அரசாங்கத்தின் - அதிகாரத் தரப்பின் மிரட்டல்களால் நீதித்துறை கேள்விக்குள்ளாகியுள்ளமை மன வருத்தமளிக்கின்றது. இந்த விடயத்தில் ஜனாதிபதியின் மௌனம் அபத்தமானது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

குருந்தூர்மலை விவகாரத்தில் மிரட்டல்களை எதிர்கொண்டதால் நீதிபதி ரி.சரவணராஜா பதவிவிலகினார் என வெளியாகும் தகவல்களால் நான் கவலையடைந்துள்ளேன். சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டுபவர்கள் நீதிபதிகள். அவர்களுக்கு எதிரான அச்சுறுத்தலானது ஜனநாயகத்தைக் குறைமதிப்புக்கு உட்படுத்துவதாகும். எனவே இலங்கையின் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க ஐக்கியப்பட்டு குரலெழுப்புவோம்- என்றார். (ச-இ)

## நீதித்துறையின் சுயாதீனத்தைப் பாதுகாக்கவேண்டும்

### இராதாகிருஷ்ணன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 2

நாட்டில் நீதித்துறை பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு முக்கியமான பொறுப்பு நாட்டின் ஜனாதிபதிக்குரியதாகும். அதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொள்ள வேண்டும் - இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார். ஹற்றனில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்றால் நிச்சயமாக நீதித்துறை சுயாதீனமாக இயங்கவேண்டும். நீதித்துறை பல்வேறு சவால்களைத் தற்போது எதிர்கொண்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி. சரவணராஜாவின் பதவிவிலகல் நாட்டின் சட்டத்துறையை கேள்விக்குட்படுத்தியுள்ளது. நீதித்துறை அரசியல் அழுத்தங்களுக்குட்படும்போது அது சுயாதீனமாக இயங்கமுடியாது. இது தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தியும் உண்டு. எனவே இதுதொடர்பில் ஜனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்- என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச செலவினத்துக்கு ரூ.3,860 பில். ஒதுக்கீடு

## 2024ஆம் ஆண்டு பட்ஜெட்

**கொழும்பு, ஒக். 2**

**2024ஆம் நிதியாண்டுக்கான அரச செலவினம் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 203 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபா இம்முறை ஒதுக்கப்பட்டுள்ளது.**

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டு சட்டவரைவை நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ள நிலையில், அந்தச் சட்டவரைவு இம்மாதம் முன்வைக்கப்படவுள்ளது. இதில் 2024ஆம் ஆண்டுக்கான அரச செலவினமாக 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபா உத்தேசிக்கப்பட்டுள்ளது. அமைச்சுகளுக்கான ஒதுக்கீட்டில், பொதுநிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கே அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த அமைச்சுக்கு அடுத்தாண்டுக்காக 886 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. நிதி, பொருளாதார உறுதிப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு 723 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சுக்கு 2023 ஆம் ஆண்டில் 614 பில்லியன் ரூபா வழங்கப்பட்டிருந்தது. பாதுகாப்பு அமைச்சுக்கு 423 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. 2023இல் பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபாவும், சுகாதார அமைச்சுக்கு 322 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தது. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு 403.6 பில்லியன் ரூபாவும், கல்வி அமைச்சுக்கு 237 பில்லியன் ரூபாவும், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்கு 140.7 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சுக்கு 100 பில்லியன் ரூபாவும், நீர்ப்பாசன அமைச்சுக்கு 84 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி அலுவலகத்துக்கு 6.6 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-44)

# நீதிபதி பதவிவிலகல் விடயத்தில் விசாரணை நடத்தப்படவேண்டும்

## அநுரகுமார வலியுறுத்து



கொழும்பு, ஒக். 2

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் வெளிப்படைத் தன்மையுடன் விசாரணைநடத்தப்பட்டு அதன் பின்புலம் கண்டறியப்படவேண்டும் என்று ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

குருந்தூர்மலை விவகாரம் தொடர்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும், அதனால் அவர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

நீதிபதி கூறியது உண்மையெனில் நாடு என்ன கட்டத்தில் உள்ளது? தமக்குச் சாதகமான தீர்ப்பு வரவில்லை என்பதற்காக நீதிபதிக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்படுமானால் நாட்டில் சட்டத்தின் ஆட்சி எப்படி நிலவும்? இந்தச் சம்பவம் தொடர்பில் உண்மையைக் கண்டறியும் வெளிப்படைத் தன்மையுடனான விசாரணை அவசியம். அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதா? ஆமெனில் அது யாரால் விடுக்கப்பட்டது? இல்லையெனில் அதன் பின்னணியில் உள்ள சூழ்ச்சி என்ன? என்பது கண்டறியப்படவேண்டும் - என்றார். (எ-44)

# சட்டத்தின் ஆட்சியில் இலங்கைக்கு தோல்வி

## மனோ எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.2

சட்டத்தின் ஆட்சியை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை தோல்வியடைந்த நாடாகியுள்ளது. முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவின் விவகாரத்தில் சந்தேகமில்லாமல் அது நிரூபணமாகியுள்ளது. இந்த விடயம் நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்சநஞ்ச சட்டஆட்சிக்கும் நேரடிச் சவாலாக மாறியுள்ளது - இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசாங்கம் சட்டத்தின் ஆட்சி என்ற தத்துவத்தைப் பாதுகாக்கத் தவறிவிட்டது. இது சிங்கள ஜனநாயக அரசியல்வாதிகளுக்கும், சிவில் சமூகத்தினருக்கும் சத்திய சோதனை. சட்டத்தின் ஆட்சி என்பது 'அதிகாரப் பகிர்வு', 'பொறுப்புக்கூறல்' என்பன போன்ற மாற்றுக்கருத்துகள் கொண்ட விடயமல்ல. சட்டத்தின் ஆட்சி என்பது தொடர்பில் மாற்றுக்கருத்தே இருக்க முடியாது.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜா நீதியை நிலைநாட்டுவதை தடுக்கும் வகையில் விடுக்கப்பட்டிருக்கும் உயிர் அச்சுறுத்தல், நாட்டில் எஞ்சி இருந்த கொஞ்சநஞ்ச சட்ட ஆட்சிக்கும் நேரடிச் சவாலாக விளங்குகிறது. தமிழ் நீதிபதி களை விமர்சித்து பயமுறுத்தி நாடாளு மன்றத்தில் உரை நிகழ்த்திய ஆளுங்கட்சியின் அரசியல்வாதிகளை அரசாங்கம் கட்டுப்படுத்தத் தவறியதால் இந்த நிலை உருவாகியுள்ளது- என்றார். (ச-இ)

# தேர்தலுக்காக 11 பில்லியன்!

ஜனாதிபதித் தேர்தல் 2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிலையில், அடுத்த நிதியாண்டுக்கான பாதீட்டில் தேர்தல் ஆணைக்குழுவுக்கு 11 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரியவருகின்றது.

2024ஆம் நிதியாண்டுக்கான ஒதுக்கீட்டுசட்டவரைவு இம்மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது. பாதீட்டின் முதலாம் வாசிப்பாக இது கருதப்படும். அரசமைப்பின் பிரகாரம் அடுத்த வருடம் ஒக்ரோபருக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டாகவேண்டும், நவம்பர் முதலாம் திகதிக்குள் ஜனாதிபதி பதவியேற்கவேண்டும். ஜனாதிபதியாகச் செயற்பட்ட கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியதையடுத்து, எஞ்சிய காலப்பகுதியாக நாடாளுமன்றம் ஊடாக ரணில் விக்கிரமசிங்க ஜுலை 20ஆம் திகதி ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். ஜனாதிபதியின் பதவிக்காலம் 2024ஆம் ஆண்டு செப்ரெம்பரில் நிறைவடையவுள்ள நிலையில், அந்தக் காலப்பகுதியில் தேர்தலுக்கான அழைப்பு விடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அறிவித்துள்ளார். (ம-44)

# படி தினம் தெரியுமோ?

**சொ**த்துக்கு சொந்தம் கொண்டாடுற மாதிரி, நினைவேந்தல் ஆருக்குச் சொந்தம் எண்டுற சண்டையள் போனவருசம் இஞ்ச அமளியா நடந்தது. முள்ளிவாய்க்காலில தொடங்கின இந்தச் சண்டை திலீபன்ர நினைவேந்தலில கொளுத்தின கற்பூரத் தீபத்தை தட்டி விழுத்தி, அடிபடுற அளவுக்கு வந்தது. இதைப் பார்த்த சனங்களுக்கு இஞ்ச வந்து இந்த அசிங்கங்களைப் பார்க்கிறதைவிடவும், போகாமல் வீட்ட இருந்து அஞ்சலி செய்திட்டுப் போகலாம் எண்ட முடிவுதான் மனதுக்க வந்திருக்கும். போனமுறை அப்பிடியெண்டால், இந்தமுறை திலீபன்ர நினைவேந்தலில கட்டிப்பிரண்டு சண்டை போட்டாலும் போடுவாங்கள் எண்டுதான் எல்லாரும் நினைச்சவை. அப்பிடியான அறிகுறியள் நல்லூர்த்திருவிழா மூட்டமே தெரியவும் தொடங்கிட்டுது.

நினைவேந்தல் தொடங்கமுதலே முன்னணிக்காரர், திலீபன்ர தூபியில முந்தி மணிவண்ணன் தரப்பால வைச்ச படங்கள் எல்லாத்தையும் தூக்கிப்போட்டு, தாங்கள் புதிசா செய்த படங்கள், பனர்களைக் கட்டினவை. கட்டாயம் இந்த விசயத்துக்கு மணிதரப்பு கேமைக் கேக்கும் எண்டு எல்லாரும் பார்த்துக் கொண்டிருந்தால் அப்பிடி எதுவும் நடக்கேலை. அதுக்குப் பிறகு மணிவண்ணன் தரப்பு தூபிக்கு முன்னால உள்ள காணிக்குள்ள திலீபன் ஆவணக்காப்பகம் ஒண்டைத் திறந்தவை. அந்த ஆவணக் காப்பகத்தின்ர வாசலை தூபியைப் பாக்கிற மாதிரி வைக்கிறதுதான் முதல்ல பிளான். ஆனால் முன்னணிக்காரர் தூபிக்கு முன்பக்கமா இருந்த காணி எல்லையில பனர்களைக் கட்டினதால, மற்றப்பக்கமாத்தான் வாசல் வைச்சவை. ஏற்கனவே கீரியும் பாம்பும் மாதிரி இருக்கிற ரண்டு தரப்பும் பக்கத்துப் பக்கத்துக் காணிக்குள்ள நிண்டால் எப்பிடியும் முட்டல், மோதல் வரத்தானே செய்யும். கட்டாயம் கடைசிநாள் ரண்டு தரப்பும் மோதாமல் இருக்கமாட்டினம் எண்டு நினைச்சால், கடைசிநாளும் நல்ல சுமுகமா நினைவேந்தல் நடந்து முடிஞ்சிட்டுது.

போனமுறையோடயே நாங்கள் அவையோட வீணாப்போய் முரண்டு பிடிக்கிறேலை எண்டு முடிவெடுத்திட்டம். அதால எங்களுக்கும்தான் கெட்டபேர். அவை தூபியில நினைவேந்தலைச் செய்திட்டுப் போகட்டும் எண்டுதான் இந்த ஆவணக் காப்பகத்தை இஞ்சால போட்டு மக்களுக்கு வரலாற்றைச் சொல்லுவம் எண்டு முடிவெடுத்தம். ஒரு நல்ல காரியத்துக்காக ஏன் நாங்கள் மோதுப்படவேணும்? எண்டு தாங்கள் ஆவணக் காப்பகத்தைப் போட்டு, திலீபன்ர வரலாற்றைப் பரப்பிற முயற்சியை ஏன் எடுத்தம் எண்டு மணிதரப்புக்காரர் சொல்லிச்சினம்.

கிட்டத்தட்ட அதே மைண்ட்செட்டில தான் முன்னணிக்காரரும் இருந்திருக்கினம். ஆவணக்காப்பகம் போட இருந்த காணியை தங்களுக்குத் தரச்சொல்லி மாநகர சபையை முன்னணிக்காரர் போய்க் கேட்டதா பட்சி சொல்லியிருந்ததெல்லோ. ஆனால், அதைப் பேப்பரில பார்த்திட்டு பிரான்ஸில நிண்ட கஜேந்திரன் எம்.பி. தொடர்புகொண்டு அப்பிடி நாங்கள் அந்தக் காணியையும் தாங்கோ எண்டு முனிசிபல்காரரிட்ட போய் கேக்கேலை. அவையோட (மணிதரப்பு) முரண்பட நாங்கள் விரும்பேலை. அவை (மணிதரப்பு) இப்பிடி ஒரு நல்ல விசயத்தைச் செய்யேக்க, இப்பிடி நாங்கள் பனர் கட்டினா அதைக் குழப்பிற மாதிரி இருக்கெண்டு கோபம் வரத்தான் செய்யும். ஆனால் அப்பிடி நாங்கள் போய்க் காணியைக் கேட்டதெண்டதில உண்மை ஒருசதவீதமும் இல்லை எண்டு சொன்னார். என்னவோ, இனியாவது இப்பிடி யோசிச்சு எல்லாரும் செய்தினம் எண்டால், நினைவேந்தல்களின்ர மகிமை கெடாமல் பாதுகாக்கலாம் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாலை காலையடி, பண்டத்தரிப்பு மறுமலர்ச்சி மன்றத்தில் இடம் பெற்ற முன்பள்ளி மழலையர் கலை நிகழ்வின் காட்சிகள். (ய)



கனடாவில் வசிக்கும் க.தில்லைநாதனின் நிதி அனுசரணையில், சித்தன்கேணி ஆன்மீக அறக்கட்டளை ஊடாக வட்டுக்கோட்டையில் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் 60 பேருக்கு உலருணவுப் பொதிகளும் விசேட தேவையுடைய 3 மாணவருக்கு தலா 5ஆயிரம் ரூபா மாதாந்த உதவித் தொகை கொடுப்பனவுகளும் அண்மையில் வழங்கிவைக்கப் பட்டன. (ய-27)



குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு கிராம ஊர்வலம் அண்மையில் ஆலயத்தில் அடியவர்களின் அரோகராக் கோஷங்களுடன் ஆரம்பமானது. (ய-66)


# மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 06 . 1964







இறப்பு 02 . 10 . 2023

## திருமதி சகுந்தலாதேவி தங்கவேல்

மானிப்பாய் வடலித்தோட்டத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி தங்கவேல் நேற்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கவேலின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு. திருமதி அச்சேந்திரம் அன்னம்மாவின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற திரு. திருமதி தெய்வேந்திரம் திலகவதி அவர்களின் அன்பு மருமகளும் திருமதி குகப்பிரியா மற்றும் குகப்பிரசாந்தின் அன்புத் தாயாரும் திரு கா.பிரகாஷ் (கனடா), திருமதி கு.சுரேகா (ஆசிரியர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் சந்திராதேவி, ரவிச்சந்திரன், ரவீந்திரன், இந்திரகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராமலிங்கம், கோமதி, சுதாமதி, இரமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2023) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வடலித் தோட்டம்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்
076 7653 663, 077 751 0036



# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 04 . 1956



மறைவு 29 . 09 . 2023

## Dr. புனிதவதி கருணாகரன்

( ஓய்வு பெற்ற அரச வைத்தியர் )

சுன்னாகம் வரியப்புலத்தை பிறப்பிடமாகவும் இல. 35A/1 டொக்யாட் வீதி, திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. புனிதவதி கருணாகரன் (ஓய்வு பெற்ற அரச வைத்தியர்) 29.09.2023 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை இராசம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும் ஓய்வுபெற்ற அதிபர் இ.கருணாகரனின் அன்பு மனைவியும் கஜானன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), கார்த்திகன் (பொறியியலாளர் - இலங்கை) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் கேசரெட்ணம் (வீதிப்பரிசோதகர் இ.போ.ச), சிறீதரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) பாஸ்கரன் (குளிரூட்டி முகாரி - கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் லீலாவதி, அம்பிகாவதி (அவுஸ்திரேலியா), மங்களேஸ்வரி ( ஓய்வு பெற்ற சிரேஷ்ர உதவி ஆணையாளர் - இறைவரித் திணைக்களம்), கருணாதேவி, அமரர் தங்கவடிவேலு, கருணானந்தராஜா (உதவிப் பொறியியலாளர்) ஆகியோரின் மைத்துனியும் செந்தில்பவன் (கணிய அளவையாளர் - கட்டார்), கோபிகிருஸ்ணன் (வைத்தியர் - யாழ். போதனா வைத்தியசாலை), லவன் பிரகாஷ் (அவுஸ்திரேலியா), துவாரகா (அவுஸ்திரேலியா), பிரசாங்கன் (பொறியியலாளர் - நீர்வழாங்கல் அதிகார சபை கொழும்பு), பிருத்துவி (மென்பொருள் பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 4123785
076 9399034

(CS 26427) M-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## பட்ஜெட் எனும் கேலிக்கூத்து!

2024ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்ட ஒதுக்கீடுகளின் முதற்கட்டத் தகவல்களும் தரவுகளும் வெளிவந்திருக்கின்றன. இதன்படி 3 ஆயிரத்து 860 பில்லியன் ரூபா அடுத்தவருடச் செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதில், பாதுகாப்பு அமைச்சுக்காக 423 பில்லியன் ரூபா ரணில் அரசாங்கத்தால் வாரி வழங்கப்பட்டிருக்கின்றது. 2009ஆம் ஆண்டு ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட பின்னர், இலங்கை அரசாங்கத்தால் பாதுகாப்புத்துறைக்கு பலநூறு பில்லியன்கள் ஏன் ஒதுக்கப்படுகின்றன? என்ற கேள்வி தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், அத்தகைய மாறாத மனோநிலையின் தொடர்கதையாகவே 2024ஆம் நிதியாண்டும் அமையப்போகின்றமை பாதீட்டின் முன்வரைவில் இருந்து தெளிவாகியிருக்கின்றது.

பாதுகாப்புத்துறைக்கு கொடுத்த முக்கியத்துவத்தில் பாதியைக்கூட அரசாங்கம் விவசாயத்துறைக்கு வழங்கவில்லை. நிதியொதுக்கீட்டில் வெறும் 100 பில்லியன் ரூபாதான் விவசாய அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சுக்கான தொகையில் நான்கில் ஒரு வீதத்துக்கும் கீழான ஒதுக்கீடு இது. 'இலங்கை ஒரு விவசாய நாடு. விவசாயத்தையும் கால்நடைத்துறையையும் வலுப்படுத்தி அவற்றில் நாட்டைத் தன்னிறைவடையச் செய்தால் பொருளாதார இடர்பாடுகள் ஓரளவு நீங்கும்' என்று ஜனாதிபதி ரணில் உட்பட அரசின் பெரும் புள்ளிகள் பலரும் பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் வலியுறுத்தியிருக்கின்றனர். இலங்கையின் மீளெழுச்சி தொடர்பில் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட பொருளாதார நிபுணர்களும் இதையேதான் வெளிப்படுத்தினார்கள். ஆனால், இலங்கை அரசாங்கத்தின் சொல்லும் செயலும் மலைக்கும் மடுவுக்கும் இடையிலான வேறுபாட்டின் பிரதியெடுப்பே என்பது பாதீட்டு முன்வரைவிலும் பறைசாற்றப்பட்டிருக்கின்றது.

இலங்கையின் சுகாதாரத்துறை முன்னெப்போதும் இல்லாத நெருக்குவாரத்துக்குள் அண்மைக்காலமாகத் தள்ளப்பட்டிருக்கின்றது. வரலாறு காணாத சுகாதாரப் பேரிடர் நாட்டை ஆட்கொண்டு, 'இலவச சுகாதார சேவை' இறந்து மடியும் நாள்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், பாதுகாப்புத் துறைக்குக் கீழான ஒதுக்கீடுதான் சுகாதாரத் துறைக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆக, விவசாயத்தையும் சுகாதாரத்துறையையும் மீண்டும் கட்டியெழுப்ப – வலுப்படுத்த அரசாங்கத்திடம் திட்டங்களோ அல்லது அதற்கான பிரையாசைகளோ இல்லை என்பதும் இங்கே இரண்டாம் கருத்தின்றிய விடயம்தான்.


கடந்த நிதியாண்டுடன் ஒப்பிடுகையில், அனைத்துத் துறைகளுக்குமான அடுத்த நிதியாண்டுக்கான ஒதுக்கீடுகள் ஒப்பீட்டளவில் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. 203 பில்லியன் ரூபாவால் 2024ஆம் ஆண்டுக்கான நிதி அதிகரிக்கப்பட்டுள்ளது. எனில், இலங்கையின் பொருளாதார மீளெழுச்சி எவ்வாறு சாத்தியமாகும்? எதிலிருந்து ஆரம்பிக்கும்? உள்ளிட்ட கேள்விகள் இங்கெழுவது தவிர்க்க முடியாத தாகின்றது. சுகாதாரத்துறைக்கும், விவசாயத்துறைக் கும் அடுத்த நிதியாண்டில் நிதி அதிகம் தேவைப்படுகின்றதென்றால் வேறு துறைகளுக்கும், அமைச்சுகளுக்குமான ஒதுக்கீடுகளில் இருந்து வெட்டியெடுத்தே தேவைப்படும் துறைகளுக்கு 'காலத்தின் முக்கியத்துவம் கருதி' வழங்க வேண்டும். அதைவிடுத்து 'பொத்தாம் பொதுவில்' அனைத்து அமைச்சுகளையும் திருப்திப்படுத்துவதான ஒதுக்கீடு நாட்டை மேலும் பின்னடைவுக்குள்தான் கொண்டு செல்லும்.

வர்த்தகச் சுழற்சியற்ற, திட்டங்களற்ற, பொதுப்பாடாகத் திருப்திப்படுத்தும் தன்மையிலான இந்த வரவு – செலவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால், அனைத்துத் துறைகளுக்கும் அமைச்சுகளுக்கும் வழங்குவதற்காக 'காகிதக் குப்பைகளாக' பணத்தை புதிதுபுதிதாக அச்சிட வேண்டும். இந்த நிலை ரூபாவை மீண்டும் பெறுமதி இழக்கவே வைக்கும். சர்வதேச வர்த்தக உலகில் ரூபா மதிப்பிழந்து அங்கலாய்த்துத் திரிவதற்கு இலங்கை அரசாங்கம் வருடாவருடம் பட்ஜெட் என்ற பெயரில் வெளிப்படுத்தும் கேலிக்கூத்தும் ஒரு காரணம். அதன் தொடர்ச்சிதான் அடுத்த நிதியாண்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"ஒரு செயலைச் செய்யும்போது உண்டாகும் தடை, அடுத்த முயற்சிக்கான ஆரம்பம்!"

– ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்–




# நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும்

*சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டு*

**கொழும்பு, ஒக். 2**

**அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டவரைவு தற்போதைய வடிவத்திலேயே (உள்ளடக்கங்கள்) நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டால், அது கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை வெகுவாகப் பாதிப்பதுடன் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

இதுதொடர்பில் ஜூரர்கள் ஆணைக்குழு வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

நிகழ்நிலைக்காப்புச் சட்டவரைவு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (நாளை) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்தச் சட்டவரைவின் சில சரத்துகள், தகவல்களை அறிதல் மற்றும் கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம் உள்ளடங்கலாக அடிப்படை சுதந்திரங்களையும் மனித உரிமைகளையும் அனுபவிப்பதில் பாதிப்பை ஏற்படுத்தும். நிகழ்நிலையிலான வெறுப்புணர்வுப் பேச்சு மற்றும் தவறான தகவல்கள் போன்றவற்றின் பரவலை உரியவாறு கையாளவேண்டிய அவசியம் காணப்படினும், இந்தச் சட்டவரைவானது ஏற்கனவே கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை உறுதிப்படுத்தத் தவறும் இலங்கை அரசாங்கத்தை மேலும் உரிமை மீறல்களில் ஈடுபடுவதற்கு இடமளிக்கும்.

எனவே இந்தச் சட்டவரைவை உடன் திரும்பப்பெறவேண்டும். இல்லாவிடின் தகவல் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதை முன்னிறுத்தி இலங்கை கொண்டிருக்கும் சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளுக்கு அமைவாக இந்தச்சட்டவரைவுதிருத்தியமைக்கப்படவேண்டும்- என்றுள்ளது. (ச-இ)

# நிர்வாகச் சீரின்மையாலேயே மின்சாரக் கட்டணம் உயர்வு

*மின் பாவனையாளர் சங்கம் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 2

நீர் மின்சாரம் மற்றும் எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சரியான முறையில் நிர்வகிக்காது மீண்டும் மின்கட்டணத்தை உயர்த்துவது மின்சாரசபையின் திறமையின்மையையே காட்டுகிறது என்று மின்சாரப் பாவனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அதன் தலைவர் எம்.டி.ஆர். அதுல மேலும் தெரிவித்ததாவது:-

கனமழை காரணமாக அதிக நீர் மின்சாரம் உற்பத்தி செய்யமுடியும். மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டும். அதைவிடுத்து உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் வகையில் மின்சாரக் கட்டணத்தை தன்னிச்சையாக உயர்த்துவதால் மக்களே கடும் நெருக்கடிக்கு ஆளாக நேரிடும். நீர்மின்சாரம் மற்றும் எரிபொருளைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் என்பன சரியான முறையில் நிர்வகிக்கப்படவேண்டும். அவ்வாறு இல்லாமல் மின்கட்டணத்தை உயர்த்தும் இந்தச் செயல் மிகவும் கேலிக்கூத்தானது - என்றார். (ச-இ)

**நாளை** 03.10.2023 செவ்வாய்க்கிழமை புரட்டாதி 16

சுபநேரம் : 10.32 - 12.02

ராகுகாலம் : 03.02 - 04.32

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக் கிளை புதிய நிர்வாகத் தெரிவு

கொழும்பு, ஒக். 2

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையின் நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் கட்சியின் செயலாளர் குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதிக் கிளையின் தலைவராக நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக பிரதேசசபை முன்னாள் உறுப்பினர் ச.ஜெயந்தன், தொகுதிக்கிளை செயலாளராக பற்றிக் தனுஷ், உப செயலாளராக வண்ணக்குமார் விமலாம்பிகை, தொகுதிக் கிளையின் உறுப்பினர்களாக சி.ஸ்ரீஜீவா, இ.காண்டீபன், வே.ஆனைமுகன், த.சிறீதரன், சி.பரமானந்தவள்ளி, ஐ.ஓ.நிரோசா, க.முருகானந்தன், த.சிவசுப்பிரமணியம், ஜீ.அம்பிகை, ஐ.நாகரஞ்சினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (எ-125)





## நாகதம்பிரான் ஆலயத்தில் சிறப்புற்ற கப்பல் திருவிழா!

யாழ்ப்பாணம், ஒக். 2

வரலாற்றுப் பிரசித்திபெற்ற நாகர் கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய கப்பல் திருவிழா, தவில், நாதஸ்வர கச்சேரி மற்றும் தமிழகத் தென்னிந்திய கர்நாடக, பக்திப் பாடகி நித்யஸ்ரீயின் இசைக் கச்சேரியுடன் சிறப்புற இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முற்பகல் ஆரம்பமாகி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரை கப்பலாட்டம் இந்த வைபவம் நடைபெற்றது.

பெருமளவான பக்தர்கள் திருவிழாவில் பங்கேற்று நாகதம்பிரானின் அருட்கடாட்சம் பெற்றனர். (ச-100)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** மனதில் இனம்தெரியாத குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்படலாம். அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். உற்சாகம் பிறக்கும். திடீர் பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**கன்னி:** நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளை இன்று எடுக்கலாம். செலவுகள் ஏற்படும். உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர்ச் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து தருவீர்கள்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாகச் செல்லவும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப் போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவி கேட்டுவருவார்கள்.

## வவுனியாவில் இம்முறை 59,500 ஏக்கரில் பெரும்போகம்!

வவுனியா, ஒக். 2

வவுனியாவில் அடுத்த பெரும் போகத்தின்போது 59 ஆயிரத்து 564 ஏக்கரில் பெரும்போகச் செய்கை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் கமக்கார அமைப்பினர் தெரிவித்ததாவது:-

வவுனியாவில் கடந்த பல மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக குளங்களில் நீர்வற்றி வறண்டு போயுள்ளதால் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்வதில் பெரும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இருப்பினும் அடுத்த பெரும்போகச் செய்கையை 59 ஆயிரத்து 564 ஏக்கரில் மேற்கொள்ள கமக்கார அமைப்புகளால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



ஆயினும் நீரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்டுள்ள இடர்பாட்டால் இந்த முறை பெரும்போகச் நெற்செய்கையை உரிய நேரத்தில் ஆரம்பிக்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

வயல் நிலங்களை பெரும்போக செயற்பாட்டுக்காகப் பண்படுத்த முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இனிவரும் நாள்களில் மழை பெய்யும் நிலையிலேயே பெரும்போக விவசாய நடவடிக்கையை ஆரம்பிக்க முடியும் -என்றனர். (ச-110)

## போரில் இறந்த சிறார்களுக்காக கிளிநொச்சியில் குருதிக்கொடை

கிளிநொச்சி, ஒக். 2

சிறுவர் தினத்தை முன்னிட்டு போரில் உயிரிழந்த சிறுவர்களின் ஞாபகார்த்தமாக கிளிநொச்சி மகா வித்தியாலய 2015 ஆம் ஆண்டு பழைய மாணவர்களின் 'எழுகை' அமையத்தின் ஒழுங்குபடுத்தலில் குருதிக்கொடை முகாமொன்று, கிளிநொச்சி பழைய மருத்துவமனை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ச-113)

## மீன்பிடி உபகரணங்கள் திருடி விற்றவர் கைது!

மன்னார், ஒக். 2

மன்னார் - பள்ளிமுனையில் மீனவர் ஒருவரின் மீன் வாடியிலிருந்த பல இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களைத் திருடிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் - பள்ளிமுனை கடற்பரப்பில் மீன் வாடியிலிருந்த 9 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் திருட்டுப் போயுள்ளன என்று மன்னார் பொலிஸ் நிலையத்தில் வாடி உரிமையாளரால் அண்மையில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய மன்னார் குற்றத்தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரணுக்க விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

விசாரணையில் குறித்த மீன்பிடி உபகரணங்களைத் திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் கற்பிட்டி பகுதியில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து திருடி விற்பனை செய்த பொருள்களும் மீட்கப்பட்டன.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமலை மருத்துவமனையில் தீ

# பல லட்சம் பெறுமதியான உபகரணங்கள் தீக்கிரை!

திருகோணமலை, ஒக். 2

திருகோமணலை - தம்பலகாமம் பிரதேச மருத்துவமனையின் மருந்துக் களஞ்சியசாலையில் திடீரென ஏற்பட்ட தீப்பரவலால் பல இலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் தீக்கிரையாகியுள்ளன. இந்த இடர் நேற்று அதிகாலைவேளை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை தீ அணைக்கும் பிரிவு மற்றும் முள்ளிப்பொத்தானை திஸ்ஸபுர இராணுவத்தினர், பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். ஆயினும் மருந்துப் பொருள்கள், ஆய்வுகூட உபகரணங்கள் என பல இலட்சம் பெறுமதியான சொத்துக்கள் தீயில் கருகி சாம்பராகின. தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச-இ)

# வாழைப்பழத்துக்குள் ஹெரோய்ன் கடத்தல்

## சந்தேகநபர் கைது

கொழும்பு, ஒக். 2

களுத்துறை சிறைச்சாலை வளாகத்துக்குள் வாழைப்பழத்தினுள் மறைத்துக் கடத்தப்பட்ட ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. கடத்தலில் ஈடுபட்ட நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர் கொண்டு வந்த உணவுகளை சிறைச்சாலை யில் கடமையில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் சோதனையிட்டபோதே இந்தப் போதைப்பொருள் மீட்கப்பட்டது. வாழைப்பழங்களினுள், 3 அங்குல 16 உறிஞ்சு (ஸ்ட்ரோ) குழாய்களுக்குள் அவை மறைத்து வைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டன. சம்பவம் தொடர்பில் களுத்துறை சிறைச்சாலை அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)


**வாடகைக்கு**

சுப்பர் A/C Sales வாகனம் வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 925 4050

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நாவற்குழியில் **12 பரப்பு (நிலப்பரப்பு)** விற்பனைக்கு உண்டு.

* வீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்
* நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்
* A-9 வீதியிலிருந்து 200 மீற்றர் தூரம்
* யாழ். பஸ் நிலையம் 3 1/2 கிலோமீற்றர் தூரம்
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* நன்னீர் ஊற்று
* ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் ( 300000/=)
* தரகர் தேவையில்லை

**தொடர்பு:- 077 6234 204**
**076 7558 606**
**077 076 0389**

(CS 26393) A-1




**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 2023, 2024 மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருத்த வேலைகளுக்கான கேள்வி கோரல்**

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன. தனித்தனி கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.**

01. வசந்த மண்டபமும் இணைந்த அறை திருத்தம் செய்தல்
02. உட்களஞ்சிய அறை, பாகசாலை திருத்தம்
03. ஆலய கதவுகள் திருத்தம்
04. வடிகால் திருத்தம்
05. CC TV Camara பொருத்துதல், திருத்தம் செய்தல்
06. மின்இணைப்பு வேலை சீர்செய்தல்
07. சுற்றுபுற வீதிக்கான நீர்க்குழாய் இணைத்தல்
08. சுவாமி எழுந்தருளும் வாகனங்கள் திருத்தம்
09. நீர்வேலி வாழைத்தோட்ட காணிக்கான களஞ்சிய அறை, நுழைவாசல் கதவு அமைத்தல்

இவ்வேலைகளுக்கான கேள்வி கோரல்கள் படிவத்தினை 2023.10.02 திகதியிலிருந்து ஆலய நிர்வாகசபை காரியாலயத்தில் 1000/=செலுத்தி பெற்றுக்கொண்டு கேள்விப்பத்திரம் பூரணப்படுத்தி 2023.10.09 ஆம் திகதி **பி.ப. 2.00** மணிக்கு முன்னதாகக் கிடைக்கும்படி **" செயலாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு "** எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **திருத்த வேலைகளுக்கான கேள்வி கோரல்** எனக் குறிப்பிடவேண்டும் அல்லது கோயில் நிர்வாக அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியில் இடப்பட வேண்டும்.

கிடைக்கப்பெறும் கேள்வி கோரல்கள் 2023.10.08 ஆம் திகதி பிற்பகல் 2.10 மணிக்கு திறக்கப்படும். 2.00 மணிக்கு பின்னர் கிடைக்கப்படும் எந்தக் கேள்வி கோரல்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விப் பத்திரம் அனுப்புவோர் கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது. அத்துடன் குறிப்பிட்ட கேள்விகளின் மொத்தத்தொகை எல்லோருக்கும் வாசித்து காட்டப்படும்.

ஆலய அறங்காவலர் சபை யாருக்கு கொடுக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கும். அதுவே இறுதித் தீர்மானமாக அமையும். கேள்விப்பத்திரம் அனுப்புவோர் ஏற்கனவே ஆலயங்களில் வேலை செய்த அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும்.

ப.க.பரமலிங்கம்
தலைவர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

ந.மோகனரூபன்
செயலாளர்
அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு

# மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 06 . 1949



மறைவு 01 . 10 . 2023

## செல்லையா றெக்ஸ் மனோராஜன்

(முன்னாள் YMCA ஊழியர்)

யாழ்ப்பாணம், கோப்பாயை பிறப்பிடமாகவும் 38/9 மருதடி வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா றெக்ஸ் மனோராஜன் (முன்னாள் YMCA ஊழியர்) அவர்கள் நேற்று (01.10.2023) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா செல்வமலர் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற துரைராஜசிங்கம் தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜொய்ஸ் கருணாதேவியின் அன்புக் கணவரும் கிறிஸ்டின் (ஆசிரியர் - சென் ஜோண்ஸ் கல்லூரி) வஜிராணி (ஆசிரியர் - சென் ஜோண்ஸ் ஆலய பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றொஷானின் அன்பு மாமனாரும் றிஷோன், றெமிஷாவின் அன்புத்தாத்தாவும் கிறிஸ்டபெல், காலஞ்சென்ற ஆனந்தராஜன் மற்றும் பிரிம்றோஸ், கருணைராஜன், ஐரின், காலஞ்சென்ற றோய் ரட்ணராஜன் மற்றும் லலா, ஷாந்தோ, ரஞ்ஜோ ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.10.2023) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரியோவான் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
071 3056 094
077 1803 588

CS 26428 M-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காம்யோற்சவம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் காம்யோற்சவப் பெருவிழா அண்மையில் ஆரம்பமாகியது. (ய-66)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெற்ற ஈழத்துச் சித்தர் ஸ்ரீமத் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 38 ஆவது ஆண்டு குருபூசை நிகழ்வின்போது பொருளாதாரம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டன. (ய-66)



300 மில்லியன் ரூபா செலவில் காலநிலைக்கு சீரமைவான விவசாய திட்டத்தின் கீழ் வன்னேரிக்குளம் மற்றும் தேவன் கட்டு குளங்களின் அணைக்கட்டு புனரமைப்பு வேலைத்திட்டம் அண்மையில் கிளிநொச்சி பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் க.கருணாநிதி ஆரம்பித்து வைத்தார். (ய-113)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வாராந்தச் சிறப்பு ஒன்றுகூடலும் புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கும் அண்மையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் முதல்வர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்றது. (ய-66)




## கௌரவிப்பு

இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலரும் சமூக சேவகருமான மனோகரன் சசிகரனின் தன்னலமற்ற சேவையை கௌரவிக்கும் முகமாக சிறந்த மனித நேயர் என்னும் விருதை நல்லூர் ரோட்டரி சங்கத் தலைவர் மருத்துவர் M.பிரதீபன் வழங்கினார். (ய-20-125)



யாழ். அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு அண்மையில் பாடசாலை அதிபரும், மாணவர் நாடாளுமன்ற செயலாளர் நாயகமுமான சோ.வாகீசன் தலைமையில் இடம்பெற்றது. (ய-100)



யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த் திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ய-27)



உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த அனைத்து மாணவர்களையும் கௌரவிக்கும் அண்மையில் அதிபர் தலைமையில் நடைபெற்றது. (ய-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

## அன்னலிங்கம் கிரிஷாத் (மிராஜ்)

தோற்றம்
21.05.1987

மறைவு
14.10.2022



எங்கள் குடும்பத்தில் நிழல் போல்
இருந்தவன் நீ.
கண் இமைக்கும் நேரத்தில்
கண்ணீர் துளியாகினாய்.
மாநிலத்தில் நீ பிரிந்து ஓராண்டே!

நீ வாழ்ந்த வீடு நீ இன்றி
நிலை குலைந்து நிற்கின்றதே.
நம் முற்றத்து பூச்செடிகள் உன் வாசம் வீச மறுக்கிறதே.
உன் வருகைக்காய் வாசல் கதவு தினம் கனா காண்கின்றதே.
அத்தனையும் துறந்து பிரபஞ்சத்தோடு ஒன்றினாயோ!

எங்கும் போகவில்லை நீ
எங்கள் இதயங்களில் வாழ்கின்றாய்.
பாதி வழி செல்லும் முன்பே - இடையில்
காலனவன் புகுந்தானோ!
காலனவன் தன் கணக்கை சரியாக்க
உன்னுடன் கரம் கோர்த்தானோ.

பழகிய பந்தமும் பாசமும் - எங்கள்
முன்னே நிலையாக நிற்க,
உன் நினைவுகள் மட்டும்
நிரந்தரமாக நிலைக்க,
நிலை மாறிப்போனாயோ நீ.

கலையாத நினைவுகளுடன் நாம்,
உதிரும் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய
எங்கள் கண்ணீர் துளிகளை காணிக்கையாக்கின்றோம்.


**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**என்றும் உன் நினைவுகளுடன்**

**குடும்பத்தினர்**

**சிவன் வீதி,**
**பரவைக்குளம், திருநெல்வேலி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முழங்காவில் ம.வி. - தர்மபுரம் மத்தி

# தர்மமுழக்கம் சமநிலையில்!

**கிளிநொச்சி, ஒக். 2**

**தர்மமுழக்கம் என்று அழைக்கப்படும் கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய அணிக்கும், கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.**

முதலில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் மகா வித்தியாலயம் 65.3 பந்துப் பரிமாற்றங்களில் 195 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. பதிலளித்தாடிய தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 142 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது.

53 ஓட்டங்கள் முன்னிலையுடன், இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த முழங்காவில் மகா வித்தியாலய அணி 83 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. 137 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கியது மத்திய கல்லூரி. ஆட்டம் முடிவடைய 13 ஓவர்களே மீதமிருந்தன. ஆட்ட நேர முடிவில் தர்மபுரம் மத்திய கல்லூரி அணி 2 இலக்குகளை இழந்து 44 ஓட்டங்களைக் பெற்றிருந்தது. இதையடுத்து ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

ஆட்டநாயகனாக தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் டினோராஜ், சிறந்த துடுப்பாட்ட வீரராக தர்மபுரம் மத்திய கல்லூரி வீரர் றொபின்சன், சிறந்த களத்தடுப்பாளராக முழங்காவில் மகா வித்தியாலய அணி வீரர் டிசாந்தன், சகலதுறை வீரராக முழங்காவில் மகா வித்தியாலய அணி வீரர் யதுசன், சிறந்த பந்து வீச்சாளராக தர்மபுரம் மத்திய கல்லூரி அணி வீரர் டினோராஜ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-113)

## சீரற்ற காலநிலை; 5,051 பேர் பாதிப்பு



கொழும்பு, ஒக். 2

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஆயிரத்து 275 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 51 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 316 வீடுகளும், 4 வர்த்தக நிலையங்களும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சீரற்ற வானிலையால் இரத்தினபுரி, களுத்துறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ச-இ)



## அராலியில் நேற்று சிறுவர்தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 2

அராலிமேற்கு முத்தமிழ் கல்வி நிலையத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்றையதினம் நடைபெற்றன.

கல்வி நிலையத்தின் பொறுப்பாசிரியை சி.நிஷாந்தினியின் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் முத்தமிழ் கடற்றொழில் சங்கத் தலைவர் ந.வசந்தகுமார், முத்தமிழ் கல்வி நிலைய ஆசிரியை வி.நிலக்ஸனா, முத்தமிழ் சனசமூக நிலையத்தினர், மாணவர்கள், பெற்றோர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)



## முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள்

மன்னார், ஒக். 2

நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலயத்தின் முன்பள்ளி சிறார்களுக்கு சிறுவர் தினத்தை முன்னிட்டு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் வேண்டுகோளுக்கமைய அவை வழங்கப்பட்டன. நானாட்டான் ஸ்ரீ செல்வமுத்துமாரியம்மன் ஆலய முன்னாள் பொருளாளரும் சமூக செயற்பாட்டாளருமான சோ.ரஸி கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். (ச-213)

## ஐஸ் போதையுடன் மன்னாரில் ஒருவர் கைது!

மன்னார், ஒக். 2

மன்னார் - முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன்பிட்டிப் பகுதியில் 25 இலட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடைய ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - தள்ளாடி இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தலவல்களை அடுத்து புலனாய்வுப் பிரிவினருடன் மன்னார் போதை ஒழிப்புப் பொலிஸார் இணைந்து நேற்றுமுன்தினம் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்தவர் என்றும், இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சிலர் தலைமறைவாகியுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-213)



## சுகாதார மேம்பாட்டு அலகு யாழ். இந்துவில் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவன் அமரர் மருத்துவர் வேலாயுதம் சாரங்கன் நினைவாக கல்லூரியில் புனரமைக்கப்பட்ட சுகாதார மேம்பாட்டு அலகு சாரங்கனின் பிறந்ததினமான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

கல்லூரி பழைய மாணவர் சங்க தலைவர் மருத்துவக் கலாநிதி கோ. றஜீவ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமரர் சாரங்கனின் பெற்றோர், கல்லூரி பிரதி அதிபர் எஸ். பரமேஸ்வரன், மருத்துவக் கலாநிதி சி.சிவதாஸ், ஆகியோர் சுகாதார மேம்பாட்டு அலகைத் திறந்துவைத்தனர்.

நிகழ்வில் சுகாதார அலகுப் பொறுப்பாசிரியர், ஆசிரியர் சங்கத் தலைவர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-27)



உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களுக்கான மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. ([illegible]-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டார...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று தேர்தலில் கொத்தலாவல வெற்றிபெற்றிருந்தாலும் சிங்கள மொழியையே அரசமொழி ஆக்கி இருப்பார். பண்டாரநாயக்க அந்தத்தேர்தலில் வெற்றிபெற்ற பிறகு சிங்களத்தை அரச மொழியாக்கினார். வடக்கு - கிழக்கில் தமிழ்மொழியை நிர்வாக மொழியாக்கினார்.

இந்தத்திட்டத்தை அவர் உடன் நடைமுறையாக்கவில்லை. 1956 இல் திட்டம் வந்திருந்தாலும் ஐந்தாண்டுகளுக்கு பின்னரே அதாவது 1961 ஜனவரி முதல் தான் அந்தத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

எனவே, 1956 இல் சிங்கள மொழி அரச மொழியானது. இதனால் தமிழர்கள் வீழ்ச்சியடைந்தனர் என்ற கருத்தை முழுமையாக ஏற்கமுடியாது. ஏனெனில் வடக்கு - கிழக்கில் ஆங்கில மொழியில் கல்வி நடவடிக்கை இடம்பெற்று வந்த நிலையில், பண்டாரநாயக்கவால் தான் தமிழ் மொழியில் கல்வி பயில முடிந்தது.

சிங்கள மொழியை அரச மொழியாகவும், தமிழை வடக்கு - கிழக்கில் நிர்வாக மொழியாகவும் ஆக்கி இருக்காவிட்டால் நாம் விவசாயிகளின் பிள்ளைகளாக, விவசாயத்தைப் பார்த்துக்கொண்டு இருந்திருக்கவேண்டும். இதனைப் பலர் மறந்துவிட்டனர்.

பண்டாரநாயக்க சிங்கள மொழியை அரச மொழியாக்கியதால்தான் நாட்டில் இனப்போர் வெடித்தது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல. நாடாளுமன்றத்தில் இன்றுள்ள தமிழ்த் தலைவர்கள், பிரபாகரன் உள்ளிட்டோருக்கு அன்று எடுத்த முடிவால்தான் கல்வி பயில முடிந்தது. ஏனெனில் பண்டாரநாயக்க இத்திட்டத்தைக் கொண்டுவந்த காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் ஆங்கில மொழியை கதைக்கக்கூடியவர்கள் 7 வீதமே இருந்தனர். ஏனைய 93 வீதமானோருக்காக எடுக்கப்பட்ட முடிவு அது - என்றார். (அ-ஒ-44)

## விபத்தில்...

இடத்தில் உயிரிழந்துள்ளார் என புதுக்குடியிருப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

7 ஆம் வட்டாரம், சிவநகர் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த ஜஜலன் (வயது-28) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். பெறுமதி வாய்ந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இவர் விபத்தில் சிக்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (அ-ஒ-19)

## பௌத்தத்தின்...

தொட்டுபெரும் பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். அதையிட்டுநாம் பெருமை அடையவேண்டும் - என கொழும்பு பாமன்கடை சிறிமகாவிஹாரையின் பிரதம தேரர் மற்றும் அமெரிக்கா கலிபோர்னியா லொஸ் ஏஞ்சலஸ் தர்ம விஜய பௌத்த விகாரையின் ஸ்தாபக பிரதம தேரர் கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றஉறுப்பினர்களானமனோ கணேசன், உதய கம்மன்பில, இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே ஆகியோர் முன்னிலையில், இதனைக்கூறியுள்ளார்.

கலாநிதி பான்டே வல்பொல பியனந்த தேரரின் 80 அகவை நிறைவை சிறிமகா விஹாரை பக்தர்களின் நிறைவேற்று சபையும், பெருந்தொகையான விகாராதிபதிகளும் இணைந்து பௌத்த தத்துவ நிகழ்வாகக் கொண்டாடினார்கள். இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கணிசமான பண்டைய தமிழ் சங்க கால அங்கத்தவர்கள் இவ்வுலகில் பௌத்தத்துக்குப் பெரும் பங்களிப்புகளை வழங்கி உள்ளார்கள். முதலாவது, வண. புத்த கோஷ மகா தேரர் மற்றும் வண. அனுருத்த மகா தேரர் ஆகியோர் அபிதர்ம காவியத்தை எழுதினார்கள். அமெரிக்காவிலும், ஆனந்த குமாரசுவாமி அவர்களே ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் பௌத்தகல்வியை, 1930 களில்போதிக்க ஆரம்பித்தார். ஆகவே பௌத்தம் என்பது சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் சொந்தமானது அல்ல. அது உலகத்துக்குச்சொந்தமானது. பண்டையகாலங்களில் தமிழ் சங்ககால அங்கத்தவர்களே பௌத்தத்தை வளர்த்து எடுத்தார்கள். இதை நாம் பெருமையுடன் கூறி வைக்கவேண்டும் - என்றார். (ஒ-இ)

## இலுப்பைக்குளத்தில்...

முன்னெடுக்கப்படவிருந்த போராட்டத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

இந்தத் தடை தொடர்பில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கவும் மக்கள் பிரதிநிதிகளுக்கு பொலிஸாரால் கெடுபிடிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை 6ஆம் கட்டை, இலுப்பைக்குளம் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் 'பொரலஸ்கந்த ரஜமகா விகாரை' என்ற பெயரிலான பௌத்த விகாரை நிர்மாணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், கோவிந்தன் கருணாகரன் ஆகியோர் உட்படப் பலரும் திட்டமிட்டிருந்த நிலையில், அவர்களில் எட்டுப் பேருக்குப் போராட்டம் நடத்த நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நிலாவெளி பொலிஸ் நிலைய தலைமைப் பொறுப்பதிகாரியின் தடை கோரல் மனுவை ஏற்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-50)

## சினோபெக்...

95 ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் ஆறு ரூபாவால் அதிகரித்து 420 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒட்டோ டீசலின் விலை 10 ரூபாவால் உயர்த்தப்பட்டு 348 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் 61 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு 417 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

அதேவேளை 92 ஒக்ரேன் பெற்றோல் 358 ரூபாவுக்கே விற்பனை செய்யப்படவுள்ளது. இந்தக் கட்டணத் திருத்தங்கள் நேற்று மாலை 6 மணி முதல் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## எரிபொருள்,...

ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி விலைச் சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நேற்று முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை என்பதன் காரணமாக விலை திருத்தம் மேற்கொள்ளப்படாத நிலையில், இன்று நள்ளிரவு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. விலைச் சூத்திரத்தின் படி கடந்த மாதம் எரிபொருள் விலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது.

இதேவேளை - எரிவாயு விலை திருத்தம் நாளை மறுதினம் 4 ஆம் திகதி அறிவிக்கப்படுமென லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. சர்வதேசச் சந்தையில் காணப்படும் எரிவாயு விலைக்கு ஏற்ப விலை திருத்தம் மேற்கொள்ளப்படுமென குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

## அதிக...

பிட்டிய தெரிவித்துள்ளார். தற்போது தெற்காசியாவில் அதிக மின்சாரக் கட்டணம் செலுத்தும் நாடுகளில் இலங்கை மூன்றாவது இடத்தில் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார உற்பத்திப் பொருள்களின் விலையைக் குறைப்பதற்கு புதிய முறையொன்று அவசரமாக அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென எரிசக்தி நிபுணர் திலக் சியம்பலாபிட்டிய வலியுறுத்தியுள்ளார். (அ-ஒ-இ)

## இளைஞன்...

ஒருவரை 'பட்டா' ரக வாகனத்தில் வந்த நபர்கள் துரத்தி துரத்தி வாளால் வெட்டியுள்ளனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான லக்சன் என்ற இளைஞர் மீதே வாள் வெட்டு நடத்தப்பட்டுள்ளது.

நாயன்மார்கட்டைச் சேர்ந்த குறித்த இளைஞர் சிறுப்பிட்டியில் திருமணம் செய்து வசித்து வருகின்றார். இந்த நிலையில் முச்சக்கரவண்டியில் பயணித்த இந்த இளைஞரை விரட்டிச் சென்று நேற்றுப் பகல் வாள்வெட்டு நடத்தப்பட்டுள்ளது. தப்பியோடிய இளைஞர் சிறுப்பிட்டி வைரவர் கோயிலுக்குள் புகுந்தபோதும் அங்கு வைத்தும் அவரை வாளால் வெட்டி விட்டு வன்முறைக் கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

வீதியால் சென்றவர்கள் வாள்வெட்டால் காயமுற்ற இளைஞரை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (அ-ஒ-23)

## நந்திக்கடலில்...

மந்துவிலைச் சேர்ந்த தர்மராசா நிசாந்தன் (வயது - 33) என்ற இளைஞர் நேற்று அதிகாலை 5.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற நிலையில், நந்திக்கடல் பகுதியில் மீட்கப்பட்டுள்ளார்.

நந்திக்கடல் காட்டந்தோனியார் கோவிலுக்கு முன்னால் உள்ள பகுதியிலேயே அவர் மூழ்கியநிலையில் மீட்கப்பட்டு, புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (அ-ஒ-19)

## 'கப்' - ...

நேற்று இரவு 8.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரி நோக்கி வந்த வாகனமும் நுணாவில் நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரான சாவகச்சேரியில் தனியார் விடுதியொன்றை நடத்தி வந்தவரான பரமநாதன் ஜோதீஸ்வரன் (வயது -38) என்பவரே உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஒ-9)

## கிளிநொச்சியில்...

இன்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் அடையாளப் போராட்டம் இடம்பெறவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பழைய மாவட்டச் செயலகம் முன்பாக இன்று காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரையான ஒரு மணி நேரம் அடையாளப் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள - பௌத்தப் பேரினவாதத்தினுடைய அடக்குமுறையாலும், தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக சரத் வீரசேகர போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய இனவாதக் கொக்கரிப்புகள் காரணமாக இங்கு வாழ முடியாமல், தனது பதவியைத்துறந்துவிட்டு நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்கு முல்லைத்தீவு நீதிவான் ரி.சரவணராஜா தள்ளப்பட்டார்.

தமிழ் நீதிபதி ஒருவர் இந்த மண்ணில் இருந்து பணியை ஆற்றமுடியாத இக்கட்டானநிலை, அவர் இந்த நாட்டை விட்டு வெளியேற வேண்டிய சூழல் எவ்வாறு ஏற்பட்டது? செத்துக் கிடக்கும் நீதித்துறை எப்படி தமிழர்களுக்கு நீதியை வழங்கும் ? என்பதனையும் வெளி உலகத்துக்கு எடுத்துச் சொல்வதற்காகவும், அடையாள எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலும் ஒரு மணிநேர அடையாளப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (அ-ஒ-100)

## சர்வதேச...

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சர்வதேச சிறுவர் தினமான நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு அருகாமையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்றுக்காலை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. மேலும், கிளிநொச்சியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் அவர்களது உறவினர்கள் 2 ஆயிரத்து 474 நாளாகத் தொடர் கவனவீர்ப்பை முன்னெடுத்து வருகின்றனர். அவர்கள் கிளிநொச்சியிலுள்ள காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக்காலை போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதேவேளை - முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்திவரும் தமது கொட்டகைக்கு முன்பாக நேற்று கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.

இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்ட சிறார்களை, தம்மிடம் மீளக் கையளிக்குமாறு வலியுறுத்தினர். அத்தோடு நீதிபதி சரவணராஜா விடயத்திலே நீதி இல்லை எனில், சமானியர்களான தமக்கு எவ்வாறு நீதி கிடைக்கும் எனவும் கேள்வி எழுப்பினர்.

'சர்வதேசமே எமக்காகக் குரல் கொடுக்க எழுந்திரு', 'கையளிக்கப்பட்ட மாணவர்கள் எங்கே?', 'குடும்பமாக ஒப்படைக்கப்பட்ட சிறுவர்கள் எங்கே?', தமிழ்க் குழந்தைகள் என்ன பயங்கரவாதிகளா?', 'சின்னஞ்சிறு சிறார்களும் ஆயுதம் ஏந்தியவர்களா?', 'பாடசாலை சென்ற மாணவன் எங்கே?' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தின்போது முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தலைவி ம.ஈஸ்வரி தனக்கும் உயிர் அச்சுறுத்தல் தொடர்ச்சியாக விடுக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டினர். (அ-ஒ-19-113-246)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைவாய்ப்பு



யாழ் நகரில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு பணியாளர்கள் தேவை.

1) **வரவேற்பாளர்கள்** (Receptionist)
(ஆண் / பெண் இருபாலாரும்)

2) **எழுதுவினைஞர்** (Clerk)

3) **சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்** (Marketing Officer)

4) **பணம் வசூலிப்பவர்** (Cash Collector)

5) **விளம்பர வடிவமைப்பாளர்** (Graphic Designer)
(பகல் / இரவு)

ஆர்வமுள்ளவர்கள் 02.10.2023 திங்கட்கிழமை காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 12.00 மணிவரை உங்கள் சுயவிவரக் கோவை யுடன் நேரில் சமுகம் தரவும்.

**உதயன் பணிமனை**

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**


# இரணைதீவுக்குச் செல்ல ஊடகவியலாளருக்குத் தடை

கொழும்பு, ஒக். 2

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டு ஒளிப்பட ஊடகவியாளரை இரணைதீவுக்குச் செல்வதைக் கடற்படையினர் தடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் எல்கே ஸ்காலியர்ஸ் என்ற அந்த ஊடகவியலாளர் ருவிற்றர் பதிவில் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கைக்கு நான் ஊடகப் பணிக்காகப் பயணம் மேற்கொண்டுள்ளேன். இரணைதீவுக்கு ஊடகப் படப்பிடிப்பாளராக நான் செல்வதை கடற்படையினரும் முழங்காவிலில் உள்ள பாதுகாப்புத் தரப்பினரும் தடை செய்கின்றனர். நான் அந்தத் தீவுக்குச் செல்வதற்காக அங்கு சட்டபூர்வமாகப் பணியாற்றுவதற்கான அனுமதியைப் பெற்றிருந்தேன். இருப்பினும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது - என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ-ஒ-இ)


## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் யாழ் கொழும்பு அதிசொகுசு பேருந்து சேவையின் ஆசன பதிவகத்திற்கு யாழ் நகரை அண்டிய ஆண்கள் தேவைப்படுகின்றனர்

தொடர்புகளுக்கு: **076 0094 946**

## DHL வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் சேவை

* சகல நாடுகளுக்குமான கடிதங்கள் 3 - 5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
* சகல நாடுகளுக்குமான பொதிகள் 5 - 7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.



**திருமுருகன் கொம்நெற்**
**321, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.**
**0777 55 45 28**

## CANADA VISA

1) **Minor Education - (Age Limit - 7 to 17 years)** தாய், தந்தை இருவரும் பிள்ளையுடன் பயணிக்கலாம்.
2) **Visitor Visa** - கனடாவில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் உள்ளோர் விண்ணப்பிக்கலாம்.
3) **Student Visa - IELTS 6.00** உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். (Jan 2024)
4) **Work and Study Program - Course fee after Visa**
மற்றும் சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் செய்து தரப்படும்.

Contact: **VISA Consultant,**
**136, Adiyapatham Road, Thirunelvely, Jaffna. T.P: 077 038 5584**

## காணி வாங்குவீர்களா ?

அச்சுவேலி - பத்தமேனி சந்தியடி 2 ம் காணி 10.5 பரப்பு பல்துறைப்பயன்பாட்டுக்கு ஏற்ற இடம்

தொடர்பு : கனடா - **6477631132**
**074 205 8803**

CR 40688


# ஓராண்டு நினைவஞ்சலி

கடந்த (12.10.2022) அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர்
## செல்லையா சண்முகம்

திதி: அபரபட்ச திருதியை



அன்பிற்கு இலக்கணமாய் வந்துதித்த அப்பா!
உங்கள் பாசமான முகம் பார்த்து ஓராண்டு ஆனதே
உங்கள் முகம் காண இன்றுவரை பரிதவித்து
-நிற்கின்றோம்
எங்கள் நிழல் எங்கள் கூடவே வருவது போல
உங்கள் புன்னகை பூத்த முகம் எங்கள் நினைவில்
என்றுமே மறையாது
எங்கள் இதயங்களில் நாம் வாழும் காலம் வரை
எங்களுடன் வாழ்ந்து கொண்டு இருப்பீர்கள் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய மணற்காட்டு
முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

**மணற்காடு,**
**காரைநகர்.**

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்**
**077 354 8473**

**பிறப்பு**
**30.01.1944**

**இறப்பு**
**12.10.2022**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org